# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ்நாடு தொலைத் தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:** 164 **தேதி**:-12.08.2014

## பாடை கட்டி கண்டன ஆர்ப்பாட்டம் – ஆகஸ்ட் 14 – ஒத்திவைப்பு

அருமைத் தோழர்களே,

வேலூர் மாவட்டத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட 140 ஒப்பந்த ஊழியர்களை உடனடியாக பணிக்கு எடுக்க மூன்றாவது கட்ட போராட்டமாக பாடை கட்டி கண்டன ஆர்ப்பாட்டத்தை ஆகஸ்ட் 14 அன்று மாவட்ட/மாநில தலைநகரங்களில் நடத்திட அறைகூவல் விடுத்திருந்தோம்.

இதற்கிடையில் NFTE தமிழ் மாநில சங்கத்தோடு இன்று (12.08.2014) பேச்சு வார்த்தை நடத்தினோம். இப்பிரச்சனையில் இணைந்து போராட அழைப்பு கொடுத்தோம். NFTE மாநிலச் சங்கமும் வேலூர் மாவட்டத்தில் இரண்டு மாவட்ட சங்கங்களும் இணைந்து நிர்வாகத்தை சந்தித்து பேச வேண்டும் என கூறியது. அதை நாமும் ஏற்றுக்கொண்டோம்.

NFTE சங்கத்தோடு ஒரு பேச்சு வார்த்தை நடைபெற்று வருவதால் ஆகஸ்ட் 14 போராட்டத்தை நாம் ஒத்திவைக்கிறோம்.

அடுத்த கட்ட போராட்டத்தை விரைவில் அறிவிப்போம். ஆகஸ்ட் 14 போராட்டத்தை வெற்றிகரமாக்க சிறந்த தயாரிப்பு பணிகளை செய்திட்ட அனைத்து மாவட்ட சங்கங்களையும் தமிழ் மாநிலச் சங்கங்கள் மனதார பாராட்டுகிறது.

போராட்ட வாளை கூர் தீட்டி வையுங்கள். கோரிக்கை நிறைவேறும் வரை நமது போராட்டம் தொடரும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

-Sd-

**C.வினோத்குமார்**
**மாநிலச்செயலாளர்.**

**S.செல்லப்பா)**
**மாநிலச்செயலாளர்.**